JUDICIAL FORM NO.53
( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | **S T C No.** | **138/2018** |
| Deposition of witness for | **PW1** | Prosecution /Defence / Court | |
| Name | சுரேஷ்குமார் | Calling | |
| Father's Name | கிருஷ்ணமூர்த்தி | Age | |
| Village | நல்லிகவுண்டன் பாளையம் | Taluk | பெருந்துறை |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) of the day of 24.11.2025

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் புகார்தாரர் திரும்ப அழைக்கப்பட்டு பு.தா.சா.1ன் முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன:**

28.01.2025- இணையதள வழி எடுக்கப்பட்ட வாகன எண்.TN 56 H 9099 மோட்டார் வாகன பதிவு சான்றிதழ் படிவம் 24 **பு.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

28.01.2025ம் தேதியிட்ட இணையதள வழி எடுக்கப்பட்ட வாகன எண். TN 56 H 9099 உரிமையாளர் மாற்று சான்றிதழ் **பு.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்னுடைய லாரியை யாருக்கு விற்பனை செய்தேன் என்றால் ஜெகன் என்பவருக்கு விற்பனை செய்தேன். ஜெகன் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக

விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. இந்த லாரியை விற்பனை செய்ததில் கிடைத்த தொகை என்பதை காட்டுவதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரிதான். லாரியை விலைக்கு வாங்கிய ஜெகன் என்பவரிடமிருந்து பணம் வாங்கியதற்கான இரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரசீது என்னிடம் இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே லாரியை வங்கியில் அடமானத்தில் இருந்ததா என்றால் இல்லை.

2. தவணை முறையில் வாங்கி இருந்தேன். விலைக்கு வாங்கிய ஜெகன் தவணை தொகையை வங்கிக்கு நேரடியாக செலுத்தி லாரியை பெற்று கொண்டாரா என்றால் இல்லை, நான் தான் வங்கிக்கு செலுத்தினேன். வழக்கிற்காக தவணை தொகையை வங்கியில் செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஜெகன் தான் நேரடியாக செலுத்தினார் என்றால் சரியல்ல. நான் என் பெயரில் வாகன உரிமையாளர் சான்றிதழை தாக்கல் செய்யாததற்கு காரணமே வங்கியில் அடமானத்திலிருந்து ஜெகன் என்பவர் பெற்று கொண்டதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லாரியின் வரவு செலவு கணக்கு உண்டான நோட்டுகள் என்னிடம் உள்ளதா என்றால் தற்சமயம் என்னிடம் இல்லை. மேற்படி விவரங்களை என்னுடைய வழக்காவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.